**20.12.2022**

**அ.வ.எண். <u>583/2014</u>**

**வா.சா.3 பழனி அவர்களின் குறுக்கு விசாரணை**

1ம் வாதி எனது தகப்பனார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனது சகோதரி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகள் எனது சகோதர சகோதரிகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் சர்வே எண் 288/1 ல் 1 ஏக்கர் 40 செண்டு, 288/2 ல் 2 ஏக்கர் 26 செண்டு, மொத்தம் 3 ஏக்கர் 66 செண்டு.

தாவா சொத்துக்கள் எனது தகப்பனார் தனது வருமானத்தில் சுயமாக அவரது பெயரில் சம்பாதித்த சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்தினை அவர் மட்டும் தான் முழுமையாக அனுபவித்து வந்தாரா என்றால் ஆமாம். எனது தகப்பனார் 17.10.2016 அன்று இறந்தார்.

இந்த வழக்கு தாக்கல் செய்த போது வழக்கறிஞர் அலுவலகத்திற்கு எனது தகப்பனாருடன் நானும் வந்திருந்தேன். இந்த வழக்கின் விவரங்களை

வழக்கறிஞரிடம் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான், எனது தகப்பனார் வயதானவர் என்பதால் வழக்கின் சங்கதிகளை நான் கூறினேன். எனது அக்கா 2ம் பிரதிவாதி மீது கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டதற்காக வழக்கு தாக்கல் செய்யவேண்டுமென்று எனது தகப்பனாரை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு நான் தான் அழைத்து வந்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

வழக்கு தாக்கல் செய்த 2014ம் வருடத்திலிருந்து நான் தான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு நான் தான் அவரை அழைத்து வந்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் என்ன சாட்சியம் அளிக்கவேண்டும் என்று நான் அவருக்கு சொல்லிக்கொடுத்து அழைத்து வந்தேன் என்றால் அவரே சாட்சியம் அளித்தார்.

எனது தகப்பனார் 2016ம் வருடம் இறந்தபின்பு 2017ம் வருடத்திலிருந்து இந்த வழக்கில் நான் மனு செய்து தரப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட்டேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்ட பின்பு கூடுதல் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகள் இந்த வழக்கினை நடத்த விருப்பம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 3 முதல் 6 பிரதிவாதிகள் இன்றைய தேதி வரை தாவா சொத்தில் எந்த உரிமையும்

கோரவில்லை என்றால் சரிதான்.

5ம் மற்றும் 6ம் பிரதிவாதிகள் இந்த வழக்கில் வழக்கிறஞர் நியமித்து பதிலுரை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. இன்றைய தேதிவரை 5ம் மற்றும் 6ம் பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 5ம் மற்றும் 6ம் பிரதிவாதிகளின் பதிலுரையில் சொல்லியுள்ள விவரங்கள் குறித்து எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எனது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுக்கும் போது நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன், ஆனால் அடமானப்பத்திரம் தான் எழுதிக்கொடுத்தார். எனக்கு எழுத படிக்க தெரியாது. எனது முதல் எழுத்தினை ஆங்கிலத்திலும், எனது பெயரை தமிழிலும் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். நான் சுமார் 10 வயதிலிருந்து கையொப்பம் செய்வேன். எனது பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான்.

எனது தகப்பனார் அவரது பெயரினை தமிழில் கையொப்பம் செய்வார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் நான் முதலாம் சாட்சி கையொப்பம் செய்தேன்

என்றால் சரிதான். அது அடமானபப்பத்திரம் என்று நினைத்து கையொப்பம் செய்தேன். பி.சா.ஆ.3 ல் உள்ள முதலாம் சாட்சி கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். (அந்த கையொப்பம் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). என்னுடன் சேர்ந்து கிருஷ்ணன் மற்றும் ஜனார்த்தனன் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்தார்கள். அவர்களும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து தான் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான்.

பி.சா.ஆ.3 ல் உள்ள கையொப்பம் எனது தகப்பனாரின் கையொப்பம் என்றால்சரிதான். (அந்த கையொப்பம் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சாட்சி கையொப்பம் 1ம் வாதியின் கையொப்பத்தினை குறியீடு செய்யமுடியாது என்று வாதி வழக்கிறஞர் ஆட்சேபணை தெரிவித்ததால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). வா.சா.ஆ.3 குறித்து 2009ம் வருடத்திலிருந்து 2014ம் வருடம் வரை நான் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் மேற்படி ஆவணம் குறித்து எனக்கு 2013ம் வருடம் தான் தெரியவந்தது.

பி.சா.ஆ.3 எழுதப்பட்ட அன்று 1ம் பிரதிவாதி எனது தகப்பனாரிடம் ரூபாய் 1 லட்சம் கிரையத்தொகையாக கொடுத்தார் என்றால் சரியல்ல. நாங்கள் எந்த பணமும்

வாங்கவில்லை. பி.சா.ஆ.3 ல் உள்ள புகைப்படம் மற்றும் கையொப்பம் எனது தகப்பனாருடையது என்றால் சரிதான். பி.சா.ஆ.3 கிரைய ரசீது எனது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்து அதில் நானும் கிருஷ்ணன் மற்றும் ஜனார்த்தனன் என்பவர்களும் சாட்சி கையொப்பம் செய்து ரூபாய் 3 லட்சம் கிரையத்தொகை வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் எந்த கிரைய ரசீதும் எழுதித்தரவில்லை.

என்னையும் ஜனார்த்தனன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களை எனது தகப்பனார் தான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார் என்றால் என்னை மட்டும் தான் எனது தகப்பனார் அழைத்து சென்றார். கிருஷ்ணன் என்பவரை நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிப்பதற்கு நானும் எனது தகப்பனாரும் அழைத்து வந்தோம். கிருஷ்ணன் என்பவருக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் அவருக்கு எழுதப்படிக்க தெரியாது.

வா.சா.ஆ.3 ன் அடிப்படையில் தான் வா.சா.ஆ.4 எழுதப்பட்டது என்றால் சரிதான். 2013ம் வருடம் 1ம் பிரதிவாதி சென்னையிலிருந்து ஒரு நபரை அழைத்து வந்து தாவா சொத்தினை விற்பனை செய்ய முயற்சி செய்யும் போது தான் எனக்கு மேற்படி கிரையம் குறித்து தெரிய வந்தது. தேதி, மாதம் எனக்கு தெரியாது. சுமார்

10 நபர்களை காரில் அழைத்து வந்தார்கள். 10 நபர்களும் சென்னையை சேர்ந்தவர்களா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதிக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதிக்கு 2 மகன்கள், 1 மகள். 4ம் பிரதிவாதிக்கு 2 மகன்கள். 5ம் பிரதிவாதிக்கு 2 மகள்கள். 6ம் பிரதிவாதிக்கு 1 மகன். 2ம் பிரதிவாதிக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2ம் பிரதிவாதிக்கு 2 மகன்கள், 1 மகள் என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு மேற்படி 3 பிள்ளைகள் இருப்பதால் அவர்கள் தாவா சொத்தினை விற்பனை செய்ய அவசியம் இல்லை என்றாலும் அவர்கள் தாவா சொத்தினை விற்பனை செய்ய முயற்சி செய்தபோது எனக்கு தெரியவந்தது என்று நான் சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கில் ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்திற்கு வரி செலுத்தி வந்தார் என்பதற்கு அவர் பெயரிலுள்ள வரி ரசீதுகள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியிடம் கடன் கேட்டார், ஆனால் அவர் கொடுக்கவில்லை. தாவா சொத்திலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து பயிர் செய்து வரலாம் என்றால் சரிதான்.

தாவா 1ம் இன சொத்தில் தான் கிணறு உள்ளது என்று காண்பிப்பதற்கு நான் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அடமானப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். தாவா 1ம் இன சொத்தில் கிணறு உள்ளது என்று காண்பிப்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் தாவா 2ம் இன சொத்தில் தான் கிணறு உள்ளது என்றாலும் சரியல்ல. தாவா 1ம் இன சொத்தில் கிணறு இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

எனது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகாரப்பத்திரம் செல்லதக்கது என்பதால் தான் 3 முதல் 6 பிரதிவாதிகள் 1ம் மற்றும் 2ம் பிரதிவாதிக்கு எதிராக எதிர்வியாஜிதம் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 5ம் மற்றும் 6ம் பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையில் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொதுஅதிகாரப்பத்திரமும் அதனடிப்படையில் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரமும் செல்லும் என்று கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

பி.சா.ஆ.3 ல் 2ம் சாட்சி கையொப்பம் செய்த ஜனார்த்தனன் என்பவர் எனது அக்காவின் கணவர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் சொத்தினை

அபகரிக்கவேண்டுமென்று எனது தகப்பனாரை தூண்டிவிட்டு இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனவே இந்த வழக்கு அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் உரிமையாளர்களுக்கு எதிராக நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலவரையறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.